# நவீன வழிகேடுகளும் இமாம் பர்பஹாரியின் எச்சரிக்கைகளும்

## தமிழாக்கம் s. அப்பாஸ் அலீ misc

இமாம் பர்பஹாரி அவர்கள் ஹிஜ்ரீ நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கவாரிஜ்கள் ஷியாக்கள் முஃதஸிலாக்கள் கத்ரிய்யாக்கள் ஜஹ்மிய்யாக்கள் போன்ற வழிகெட்டப்பிரிவுகள் இக்காலத்தில் பரவி இருந்தன. இந்த வழிகெட்டக் கூட்டங்கள் நபிமொழிகளை மறுத்து குர்ஆனுக்கு தங்கள் மனோஇச்சைப்படி விளக்கம் அளித்தனர்.

தங்களின் புதுமையான வழிகேடுகளை நியாயப்படுத்துவதற்காக நபித்தோழர்களை மிகவும் தரக்குறைவாக விமர்சித்தனர். இஸ்லாம் என்ற பெயரில் இவர்கள் உருவாக்கிய வழிகேடுகளை ஏற்றுக்கொள்ளாமல் நபிவழியில் சென்ற மக்களைப் பார்த்து காஃபிர்கள் என்றும் முஷ்ரிக்குகள் என்றும் கூறினர்.

### ஆசிரியர் குறிப்பு

இந்த வழிகேடர்களின் பித்அத்களுக்கு எதிராக இமாம் பர்பஹாரி அவர்கள் வழிகேடுகளை அம்பலப்படுத்தினார். வழிகேடர்களின் சுயக்கருத்துக்களை புறக்கணித்து நபிமொழியின் பக்கம் மக்களை அழைத்தார். இந்த அறிஞருக்கு எதிராக வழிகேடர்கள் கடும் சூழ்ச்சிகள் செய்தனர். அல்லாஹ்வின் மார்க்கத்தில் எவருக்கும் அஞ்சாமல் சத்தியத்தை உரக்கச் சொன்ன இந்த அறிஞர் ஹிஜ்ரீ 328 வது வருடத்தில் மரணித்தார்.

ஹம்பளிகளின் தலைவர். வழிகாட்டியாகவும் இமாமாகவும் அறிஞராகவும் இருந்தவர். சத்தியத்தை உரக்கச் சொல்பவராகவும் ஹதீஸ்களை நோக்கி வருமாறு மக்களிடம் அதிகமாக பிரச்சாரம் செய்பவராகவும் இருந்தார். அல்லாஹ்வின் விசயத்தில் பழிப்போரின் பழிச்சொல்லுக்கு அஞ்சாதவர்.

**சியறு அஃலாமின் நுபலா (பாகம் 15 பக்கம் 90)**

பஃக்தாத் நாட்டைச் சார்ந்த இந்த அறிஞர் பித்அத்வாதிகளுக்கு எதிராக தனது நாவாலும் கரத்தாலும் கடுமையாக போராடக்கூடியவராக இருந்தார்.

**நூல் அல்அஃலாம் (பாகம் 2 பக்கம் 201)**

வழிகேடர்களுக்கு எதிரான தனது போராட்டத்தில் வழிகேடுகள் ஏன் உருவாகியது? எப்படி உருவாகியது? என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்த இமாம் பர்பஹாரி அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தின் நன்மை கருதி இது குறித்து ஷரஹு சுன்னா (நபிவழியின் விளக்கம்) எனும் நுலைத் தொகுத்தார். இதில் வழிகேடர்கள் செய்யும் குழப்பங்களை அம்பலப்படுத்தி அது குறித்து எச்சரிக்கையும் செய்துள்ளார்.

தற்காலத்தில் சகோதரர் பீஜே சில ஆதாரப்பூர்வமான நபிமொழிகள் அவரது சுய அறிவுக்கு ஒத்துவரவில்லை என்பதால் அவற்றை மறுத்து வருகிறார். இத்துடன் இவர் மறுக்கும் நபிமொழிகளை நம்பும் மக்களை முஷ்ரிக் என்றும் துணிந்து கூறுகிறார். நபித்தோழர்கள் மீது பொய்யான விமர்சனங்களைக் கூறி நபித்தோழர்கள் மீது சமுதாயம் வைத்துள்ள மதிப்பையும் மரியாதையையும் கெடுக்கும் வேலையில் ஈடுபடுகிறார்.

நபித்தோழர்களை விட தான் மார்க்கத்தை நன்கு விளங்க முடியும் எனப் பெருமையடித்து தான் நபித்தோழர்களுக்கு மேல்நிலையில் உள்ளது போன்ற தோன்றத்தை அப்பாவி மக்களிடம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார். இஸ்லாமிய வரலாற்றில் இதற்கு முன் தோன்றிய வழிகெட்ட பிரிவினர் செய்த வேலைகளும் தற்போது சகோதரர் பீஜே செய்துகொண்டிருக்கும் இந்த வேலைகளும் ஒன்று

என்பதால் இமாம் பர்பஹாரி அவர்கள் அன்று வாழ்ந்த பித்அத்வாதிகளுக்கு எதிராக விடுத்த பல எச்சரிக்கைகள் இன்று வாழும் சகோதரர் பீஜேவிற்கு கச்சிதமாக பொருந்திப் போகிறது.

ஷரஹு சுன்னா (நபிவழி விளக்கம்) என்ற இந்நூல் இமாம் பர்பஹாரீ அவர்கள் ஹிஜ்ரீ மூன்றாவது நூற்றாண்டின் முடிவில் எழுதிய பழமையான நூலாகும். இப்போது ஒருவர் இதை வாசித்தால் இமாம் பர்பஹாரீ அவர்கள் தற்காலத்தில் வாழ்ந்து சகோதரர் பீஜேவின் இந்த ஃபித்னாக்களை கண்கூடாக கண்டு தற்போது தான் இந்நூலை எழுதி இருப்பாரோ என்று எண்ணத் தோன்றும்.

வழிகேட்டின் முகங்கள் வெவ்வேறாக இருந்தாலும் அவை உருவாகிய அடிப்படை ஒன்றுதான். எனவே அனைத்து வழிகெட்ட கூட்டங்களுக்கிடையில் பொதுவான பல ஒற்றுமைகளை காணமுடியும். இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய வழிகெட்ட அனைத்துக் கூட்டங்களும் நபிமொழிகளுடன் மோதினர். தற்போது சகோதரர் பீஜேவும் நபிமொழிகளுடன் மோதுவதால் வழிகேடர்களுக்கு சொல்லப்பட்ட அடையாளங்கள் இவருக்கும் பொருந்திவிட்டது.

இமாம் பர்பஹாரி அவர்களின் இந்நூலை முழுமையாக மொழிபெயர்ப்பது நமது நோக்கமல்ல. மாறாக தற்போது தமிழ் உலகில் புகுந்துள்ள புதிய வழிகேடுகள் குறித்து அவர் கூறிய கருத்துக்களை மட்டும் கீழே தமிழாக்கம் செய்துள்ளோம். மேலும் இவற்றுக்கு தலைப்புகள் இட்டு அந்த தலைப்பிற்கு ஏற்றவாறு வரிசைபடுத்தியதும் நமது வேலையாகும்.

## நூலாசிரியர் உரை

புகழனைத்தும் அல்லாஹ்விற்கே! அவனே நமக்கு இஸ்லாமின்பால் நேர்வழிகாட்டினான். அதன் மூலம் நமக்கு

பேருபகாரம் செய்தான். சிறந்த சமுதாயத்தில் நம்மை வெளிப்படுத்தினான். அவன் விருப்பத்தையும் திருப்த்தியையும் பெறும் பாக்கியத்தையும் அவன் வெறுப்பையும் அதிர்ப்தியையும் பெற்றுத் தரும் காரியத்தில் ஈடுபடாமல் வாழ்வதையும் அவனிடம் வேண்டுகிறோம்.

## அஹ்லுஸ் சுன்னத் வல்ஜமாஅத்தினர் யார்?

1. அறிந்துகொள்ளுங்கள்! நபிவழியே இஸ்லாமாகும். இஸ்லாம் என்பதே நபிவழியாகும். இவ்விரண்டில் ஒன்று மற்றொன்று இல்லாமல் நிலைபெற முடியாது. ஜமாத்தை பற்றிப்பிடிப்பதும் நபிவழியாகும். ஒருவர் ஜமாத்தை விட்டும் விலகி வேறு வழியை நாடிச் சென்றால் அவர் தன் கழுத்தில் உள்ள இஸ்லாம் என்ற மாலையை கழற்றிவிடுகிறார். மேலும் அவர் வழிகெட்டவராகவும் வழிகெடுக்கக்கூடியவராகவும் ஆகிவிடுகிறார்.

2. நாம் முன்பு தெளிவுபடுத்திய ஜமாஅத் (கூட்டம்) என்ற அடிப்படை முஹம்மது(ஸல்) அவர்களின் தோழர்களையே குறிக்கும். அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் அருள்புரியட்டும். அவர்களே அஹ்லுஸ் சுன்னத் வல்ஜமாத்தினர் ஆவர். அவர்களிடமிருந்து மார்க்கத்தை பெறாதவன் வழிகெட்டவனும் பித்அத்வாதியும் ஆவான். அனைத்து பித்அத்தும் வழிகேடாகும். வழிகேடும் வழிகேடர்களும் நரகத்திற்கே செல்வார்கள்.

ஒருவன் வழிகேட்டிற்கு சென்றபின் அதை நேர்வழி என தான் தவறாகக் கருதிவிட்டதாகக் கூறி சமாளிக்க முடியாது. மேலும் நேர்வழியை தான் வழிகேடு என தவறாக கருதிவிட்டதாகக் கூறி சமாளிக்க முடியாது என உமர்(ரலி) அவர்கள் கூறினார்கள். ஏனென்றால் விசயங்கள் தெளிவாகிவிட்டன. ஆதாரங்கள் உறுதியாகிவிட்டன. இனி காரணம் கூற வழியில்லை. சுன்னத்தும்

ஜமாஅத்தும் அனைத்து மார்க்க விசயங்களையும் மக்களுக்குத் தெளிவுபடுத்தி உறுதிபடுத்திவிட்டது. பின்பற்றுவதே மக்களின் கடமையாகும்.

3. அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக! மார்க்கம் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே வந்தது. மனித அறிவுகளின் மீதும் மனிதச் சிந்தனையின் மீதும் மார்க்கம் அமைக்கப்படவில்லை. மார்கக்கல்வி அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமே உள்ளது. எனவே உனது மனோஇச்சைப்படி எதையும் பின்பற்றாதே. அவ்வாறு நீ பின்பற்றினால் நீ மார்க்கத்தை விட்டும் விலகி இஸ்லாமிலிருந்து வெளியேறிவிடுவாய். ஏனென்றால் உன்னிடம் சான்றே இல்லை.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் தன் சமுதாயத்திற்கு தன் வழி எது? என்பதை தெளிவுபடுத்திவிட்டார்கள். மேலும் தன்தோழர்களுக்கும் அதைத் தெளிவுபடுத்தினார்கள். அவர்களே ஜமாஅத். அவர்களே பெரும் கூட்டம் ஆவர். அந்த பெரும் கூட்டத்தினரே சத்தியத்தில் உள்ளவர்கள். எனவே இஸ்லாமிய கொள்கை விசயங்களில் எதிலாவது இறைத்தூதர்(ஸல்) அவர்களின் தோழர்களுடன் முரண்படுபவர் காஃபிராகிவிட்டார்.

4. அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக! அடியான் கட்டுப்பட்டு உண்மைப்படுத்தி பின்பற்றக்கூடியவனாக ஆகும் வரை அவனுடைய இஸ்லாம் முழுமைபெறாது. இஸ்லாமில் சில விசயங்கள் உள்ளன. அவ்விசயங்களில் நபித்தோழர்களை நாம் கவனத்தில் கொள்ள முடியாது என யாராவது கூறினால் அவர் நபித்தோழர்களை பொய்யார்கள் எனக் கூறுகிறார். அவர்களைக் குறைகூறி தனியொரு பிரிவாக மாறுவதற்கு இதுவே போதுமானது. எனவே அவன் தானும் வழிகெட்டு மற்றவர்களையும் வழிகெடுப்பவன். இஸ்லாமில் இல்லாததை இஸ்லாமில் புதிதாக நுழைப்பவன் ஆவான்.

5. அறிந்துகொள்ளுங்கள்! என் சமுதாயம் எழுபத்து மூன்று கூட்டங்களாக பிரிவர். அனைத்து கூட்டமும் நரகத்திற்கு செல்லும். ஒரே ஒரு கூட்டத்தைத் தவிர. அது தான் ஜமாஅத்தாகும் என அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் யார் அல்லாஹ்வின் தூதரே! எனக் கேட்கப்பட்டது. இன்று நானும் எனது தோழர்களும் எவ்வழியில் உள்ளோமோ அவ்வழியில் செல்பவர்களே அவர்கள் என பதிலளித்தார்கள்.

இம்மார்க்கம் உமர்(ரலி) அவர்களின் காலத்திலும் உஸ்மான்(ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்திலும் எந்த பிரிவினையும் ஏற்படாமல் மக்கள் ஒரே ஜமாத்தாக இருந்தனர். உஸ்மான்(ரலி) கொல்லப்பட்ட பிறகே முரண்பாடுகளும் பித்அத்களும் உருவாகி மக்கள் பலப் பிரிவினராக மாறினர். இந்த மாற்றம் ஏற்படத் தொடங்கிய நேரத்தில் சத்தியத்தைக் கூறி அதை செயல்படுத்தி அதை நோக்கி அழைத்து அதில் உறுதியாக இருந்த மக்களும் இருந்தனர்.

நிலமை இவ்வாறே நீடித்து வந்த நிலையில் நான்காவது தலைமுறை வந்தபோது மக்கள் மிகவும் மாறிவிட்டனர். பித்அத்கள் பரவின. ஜமாத்தின் வழியை புறக்கணித்து அசத்திய வழியை நோக்கி அழைப்பவர்கள் அதிகமாகினர். இறைத்தூதர்(ஸல்) அவர்களும் நபித்தோழர்களில் எவரும் பேசாத விசயங்களில் சோதனைகள் ஏற்பட்டன. அல்லாஹ் பிரிவினையைத் தடுத்திருக்கும் போது அந்த பிரிவினையின் பால் அழைப்புவிடுத்தனர்.

சிலர் சிலரை கா∴பிர் எனக் கூறத்தொடங்கினர். ஒவ்வொருவரும் தன் சுயக்கருத்தை நோக்கி மக்களை அழைத்தனர். அக்கருத்துக்கு மாறுபடுபவர்களை கா∴பிர்கள் எனக் கூறினர். அறிவற்றவர்களும் அறிவிலிகளுமே எஞ்சினர். உலக விசயங்களில் மக்களுக்கு ஆசைகாட்டினர். உலகத்தின் தண்டனையை காட்டி மக்களை

அச்சுறுத்தினர். எனவே அவர்கள் மீதுள்ள பயத்தாலும் உலக இன்பத்தின் மீதுள்ள மோகத்தாலும் பெரும் கூட்டம் அவர்களைப் பின்தொடர்ந்தது. சுன்னாவும் சுன்னாவுடையவர்களும் மறைக்கப்பட்டனர்.

பித்அத்கள் வெளிப்பட்டு பரவின. பலவழிகளில் தங்களை அறியாமலேயே மக்கள் காஃபிரானார்கள். அல்லாஹ்வின் ஆற்றல் அவனது வசனங்கள் அவனது கட்டளைகள் அவனது தடைகள் அவனது சட்ட திட்டங்கள் ஆகியவற்றை தங்களின் அறிவின் மீதும் சிந்தனையின் மீதும் போட்டுப்பார்த்தார்கள். அவர்களின் அறிவுக்கு ஒத்து இருந்தால் அதனை ஏற்றனர். அவர்களின் அறிவுக்கு முரண்பட்டால் அதனை மறுத்தனர். இதனால் இஸ்லாமும் சுன்னாவும்(நபிவழி) அந்நியப்பட்டது. அஹ்லுஸ் சுன்னாவினர் அவர்களின் வீடுகளுக்குள் அரிதாகிப் போனார்கள்.

6. அல்லாஹ்விடமிருந்து வந்தவையே உண்மையாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்துகாட்டியதே சுன்னத்தாகும். அபூபக்ர்(ரலி) உமர்(ரலி) உஸ்மான்(ரலி) ஆகிய நபித்தோழர்களின் ஆட்சியில் நபித்தோழர்கள் எக்கொள்கையில் ஒன்றுபட்டு இருந்தார்களோ அதுவே ஜமாஅத் ஆகும். நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டல் (சுன்னத்) மற்றும் நபித்தோழர்கள் (ஜமாஅத்) எக்கொள்கையில் ஒன்றுபட்டிருந்தார்களோ அக்கொள்கையை மட்டும் ஒருவர் கடைபிடித்தால் அவர் பித்அத்வாதிகள் அனைவரையும் விட்டு வெளியேறிவிடுவார். அவருடைய உடல் நிம்மதியுற்று அல்லாஹ் நாடினால் அவருடைய உள்ளமும் சீர்பெற்றுவிடும்.

ஏனென்றால் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் என் சமுதாயம் விரைவில் பிரியும் எனக் கூறினார்கள். அந்தக் கூட்டங்களில் வெற்றி பெறும் கூட்டத்தைப் பற்றி அவர்கள் தெளிவுபடுத்தும் போது நானும்

என்தோழர்களும் எவ்வழியில் சென்றோமோ அதனை ஏற்றுக்கொண்ட கூட்டமே அது எனக் கூறினார்கள். இதுவே நேரான வழியும் சரியான தீர்வும் தெள்ளத் தெளிவான விளக்கமும் ஆகும். வரம்புமீறுவதையும் தேவையற்ற விசயங்களில் மூழ்குவதையும் விட்டு உங்களை எச்சரிக்கிறேன். உங்களின் பழமையான மார்க்கத்தை நீங்கள் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள்.

7. அறிந்துகொள்ளுங்கள். பழமையான மார்க்கம் என்பது நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின் உஸ்மான்(ரலி) அவர்கள் கொல்லப்படும் வரை உள்ள இடைப்பட்ட காலமாகும். உஸ்மான்(ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்ட போதே முதன்முதலில் பிரிவினையும் முரண்பாடும் தோன்றியது. இதன் பின்னே இஸ்லாமிய சமூகத்திற்கிடையே போர் ஏற்பட்டு சமூகம் பிரிந்தது. மனோஇச்சையை பின்பற்றி உலக ஆதாயத்தை நோக்கி சாயும் நிலை ஏற்பட்டது.

8. நபித்தோழர்கள் ஏற்றிராத ஒரு கொள்கையை எடுத்துரைக்க எவருக்கும் அனுமதியில்லை. ஒரு மனிதன் தனக்கு முன்னால் பித்அத்வாதிகள் உருவாக்கிய புதிய கொள்கையை நோக்கி மக்களை அழைத்தால் அவனும் அந்த வழிகெட்ட கொள்கையை புதிதாக உருவாக்கியவன் ஆவான். இவ்வகையான கருத்துக்களை கூறுபவன் நபிமொழியை மறுத்து சத்தியத்திற்கும் நபித்தோழர்களுக்கும் (ஜமாத்திற்கும்) மாறுபட்டவன் ஆவான். தன் மனோஇச்சையை ஆகுமாக்கிக்கொண்டவன். இவனே இந்த சமூகத்திற்கு இப்லீஸை விட தீங்கானவன்.

பித்அத்வாதிகள் எந்த நபிமொழிகளை புறக்கணித்து பிரிந்து சென்றார்களோ அந்த நபிமொழிகளை அறிந்து கெட்டியாக பிடித்துக்கொண்டவரே சுன்னத் (நபிவழி) மற்றும் ஜமாஅத்

(நபித்தோழர்களின் வழி) உடையவர் ஆவார். இவரைப் பின்பற்றுவதும் இவருக்கு உதவி செய்வதும் இவரை காப்பதும் அவசியமாகும். அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் யாருக்கு நலம்நாட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்களோ அத்தகையவர்களில் இவரும் ஒருவராவார்.

9. அறிந்துகொள்ளுங்கள்! பித்அத்தின் அடிப்படைகளாகிறது நான்கு வகைகளாகும். இந்த நான்கிலிருந்தே எழுபத்திரரெண்டு மனோஇச்சைகள் உருவாகின்றன. இவ்வாறு ஒவ்வொரு பித்அத்தும் பல கிளைகளாகப் பிரிந்து இறுதியில் இரண்டாயிரத்து எண்ணூறாக மாறுகின்றன. இவையனைத்தும் நரகத்திற்கு இழுத்துச் செல்லக்கூடிய வழிகேடுகளாகும் ஒரே ஒரு கூட்டத்தைத் தவிர!

இந்நூலில் கூறப்பட்ட உபதேசங்களை தன் உள்ளத்தில் எந்த உறுத்தலும் சந்தேகமும் இன்றி ஏற்றுக்கொண்டு அதையே தன் கொள்கையாக கொண்டவர்களே அவர்கள். இவர்களே சுன்னத் உடையவர்கள். அல்லாஹ் நாடினால் இவர்களே வெற்றியாளர்கள்.

10. ஒரு மனிதரிடம் நபிவழியின் குணாதிசியங்கள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளது என்பதை அறியாமல் அவரைப் பார்த்து சுன்னா உடையவர் (நபிவழியில் செல்பவர்) எனக் கூற எவருக்கும் அனுமதியில்லை. எனவே நபிவழி ஒருவரிடம் முழுமையாக அமையாத வரை அவர் குறித்து சுன்னா உடையவர் (நபிவழியில் செல்பவர்) என சொல்லக்கூடாது.

எழுபத்திரெண்டு மனோஇச்சைகளுக்கும் அடிப்படையாக கத்ரியா முர்ஜியா ஷீஆ கவாரிஜ் ஆகியநான்கு மனோஇச்சைகளே உள்ளன. இந்த நான்கு மனோஇச்சைகளிலிருந்து தான் எழுபத்திரெண்டு மனோஇச்சைகளும் கிளைகளாகின்றன. அபூபக்ர்(ரலி) உமர்(ரலி) உஸ்மான்(ரலி) அலீ(ரலி) ஆகிய நபித்தோழர்கள் மற்ற

நபித்தோழர்களைக் காட்டிலும் சிறப்பிற்குரியவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு மற்ற நபித்தோழர்கள் குறித்து விமர்சனம் செய்யாமல் அவர்களைப் பற்றி நல்லவிதமாகப் பேசி அவர்களுக்காக பிரார்த்தனை செய்பவர் ஷீஆ கொள்கையிலிருந்து அதன் துவக்கம் முதல் இறுதி வரை முழுவதுமாக வெளியேறி விட்டார்.

ஈமான் என்பது சொல்லும் செயலுமாகும். அது கூடும். குறையும் எனக் கூறுபவர் முர்ஜிஆ கொள்கையிலிருந்து அதன் துவக்கம் முதல் இறுதி வரை முழுவதுமாக வெளியேறிவிட்டார். முஸ்லிம்களில் நல்லவரானாலும் தீயவரானாலும் அனைவருக்கும் பின்னால் நின்று தொழுகலாம். எந்த ஆட்சியாளரானாலும் அவருடன் புனிதப் போரில் ஈடுபட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு ஆட்சியாளருக்கு எதிராக வாள் ஏந்தி புறப்படாமல் அவர்களுக்காக நல்லவிதமாக பிரார்த்தனை செய்பவர் கவாரிஜ்களின் கொள்கையிலிருந்து அதன் துவக்கம் முதல் இறுதி வரை முழுவதுமாக வெளியேறிவிடுகிறார்.

விதியில் நல்லதும் தீயதும் அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே ஏற்படுகிறது. அவன் தான் நாடியோரை வழிகேட்டில் விடுகிறான். தான் நாடியோருக்கு நேர்வழிகாட்டுகிறான் எனக் கூறுபவர் கத்ரியா கொள்கையிலிருந்து அதன் துவக்கம் முதல் இறுதிவரை முழுவதுமாக வெளியேறிவிடுகிறார். இவரே சுன்னா உடையவர் (நபிவழியில் நடப்பவர்) ஆவார்.

## நபிமொழிகளை வழிகேடர்களே மறுப்பார்கள்

11. பித்அத்வாதிகள் உருவாக்கிய பித்அத்கள் அனைத்தும் நபிமொழியை புறக்கணித்த பின்பே உருவாகின. எனவே தடைசெய்யப்பட்ட விசயங்களை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள். ஒவ்வொரு புதுமையும் பித்அத்தாகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். வழிகேடும் வழிகேடர்களும் நரகத்திற்கே செல்வார்கள்.

12. உன் அறிவுக்கு எட்டாத எந்த நபிமொழியை நீ கேட்டாலும் அதை ஏற்றுக்கொண்டு கட்டுப்பட்டுவிடு. அதன் விளக்கத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிட்டு அதை உண்மைப்படுத்த வேண்டும். அல்லாஹ் முதல் வானத்திற்கு இறங்கி வருகிறான் என்ற நபிமொழியை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இது போன்ற நபிமொழிகளில் எந்த ஒன்றுக்கும் உன் மனோஇச்சைப்படி நீ விளக்கம் கொடுக்காதே. இவற்றை அப்படியே நம்புவதே இறைநம்பிக்கையாகும். இவற்றில் ஏதாவது ஒரு நபிமொழிக்கு தன் சுயசிந்தனையைக் கொண்டு யாராவது விளக்கம் கொடுத்தால் அவர் ஜஹ்மிய்யா ஆவார்.

13. ஒருவன் நபிமொழிகளை ஏற்றுக்கொள்ளாமல் அவற்றில் குறை கூறுவதை நீ கண்டால் அல்லது இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் சிலவற்றை மறுப்பதைக் கண்டால் அவன் இஸ்லாமிற்கு எதிரானவன் என்பதை அறிந்துகொள். அவன் மோசமான கொள்கையுடையவன் ஆவான். அவன் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மீதும் அவர்களுடைய தோழர்கள் மீதே குறைகூறுகிறான். நாம் அல்லாஹ் அவனுடைய தூதர் குர்ஆன் நன்மை தீமை இவ்வுலகம் மறுமை ஆகியவற்றை ஹதீஸ்களின் வாயிலாகவே அறிந்துகொண்டோம். மேலும் குர்ஆனின் பால் நபிமொழிக்கு உள்ள தேவையை விட குர்ஆனே நபிமொழியின் பக்கம் அதிக தேவையுடையதாய் உள்ளது.

14. அல்லாஹ்வின் வேதத்தில் ஒரு வசனத்தை ஒருவர் மறுத்தாலும் அவர் குர்ஆன் முழுவதையும் மறுத்துவிட்டார். இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் ஒன்றை ஒருவர் மறுத்தாலும் அவர் அனைத்து ஹதீஸ்களையும் மறுத்தவர் ஆவார்.

15. இறைநம்பிக்கைக்கொண்ட ஒரு அடியான் அல்லாஹ் அருளியவற்றில் ஏதேனும் ஒன்றை மறுத்தால் அல்லது

அல்லாஹ்வின் வார்த்தையில் சுயமாக எதையேனும் சேர்த்தால் அல்லது குறைத்துவிட்டால் அல்லது மாண்பும் வலிமையும் மிக்க அல்லாஹ் கூறியவற்றில் எதையேனும் நிராகரித்தால் அல்லது அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறியவற்றில் எதையேனும் நிராகரித்துவிட்டால் அவர் இறைமறுப்பாளராக மாறிவிடுவார். எனவே அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். உங்களை நீங்களே கவனித்துக்கொள்ளுங்கள். மார்க்கத்தில் எல்லைமீறுவதை விட்டும் உங்களை எச்சரிக்கின்றேன். ஏனெனில் வரம்புமீறுதல் நிச்சயமாக சத்தியத்தின் பாதை அல்ல.

16. ஒருவன் ஹதீஸ்களின் மீது குறை கூறுவதையோ அல்லது ஹதீஸ்களை மறுப்பதையோ அல்லது ஹதீஸ்களை விடுத்து வேறு எதையாவது தேடுவதையோ நீங்கள் கண்டால் அவன் இஸ்லாமிற்கு எதிரானவன் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவன் மனோஇச்சையை பின்பற்றும் பித்அத்வாதி ஆவான்.

17. ஒரு மனிதனிடம் ஹதீஸ்கள் சொல்லப்படும் போது அதை ஏற்காமல் அவன் குர்ஆனை நோக்கிச் செல்வதை கண்டால் அவன் இஸ்லாமிற்கு விரோதமான கொள்கை கொண்டவன் என அறிந்துகொள்ளுங்கள். அவனைப் புறக்கணித்து அவனிடமிருந்து எழுந்து சென்றுவிடுங்கள்.

18. ஒரு மனிதன் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் ஹதீஸ்களை செவியேற்கும் போது நாங்களே அல்லாஹ்வை மகிமைப்படுத்துகிறோம் எனக் கூறுவதைக் கேட்டால் அவன் ஒரு ஜஹ்மீ (அல்லாஹ்வின் தன்மைகளையும் பண்புகளையும் மறுப்பவன்) என்பதை அறிந்துகொள்ளுங்கள். இந்த வார்த்தையின் மூலம் அவன் நபி(ஸல்) அவர்களின் ஹதீஸ்களை மறுக்கவே நாடுகிறான்.

அல்லாஹ் இறங்குவது பற்றிய ஹதீஸ் அல்லாஹ்வை மறுமையில் பார்ப்பது பற்றி ஹதீஸ் இன்னும் இதுபோன்ற ஹதீஸ்களை அவன் செவியுறும் போது நாம் அல்லாஹ்வை கண்ணியப்படுத்த வேண்டும் என்று அவன் கூறுகிறான். இவ்வாறு அவன் கூறுவதால் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் ஹதீஸ்களை அவன் மறுக்கவில்லையா? அவன் அல்லாஹ்வைப் பற்றி மற்றவர்களை விட எனக்கே நன்கு தெரியும் என வாதிடுகிறான். இத்தகையவர்கள் விசயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். ஏனென்றால் பொதுமக்களில் பெரும்பாலானோர் இவ்வாறே நம்பி ஏமாறுகின்றனர். இவர்கள் விசயத்தில் மக்களுக்கு எச்சரிக்கை செய்யுங்கள்.

இதுபோன்ற ஒரு விசயத்தில் ஒருவர் விளக்கம் பெறும் எண்ணத்தில் உங்களிடம் கேள்வி கேட்டால் அவரிடம் பேசுங்கள். அவருக்கு வழிகாட்டுங்கள். உங்களுடன் விவாதம் செய்ய முன் வந்தால் அவரை விட்டு விலகிவிடுங்கள். ஏனெனில் விவாதத்தில் வீண் தர்க்கமும் குதர்க்கமும் வரம்புமீறுதலும் கோபம் கொள்வதுமே உள்ளது. இவை அனைத்தையும் விட்டு நீங்கள் தடுக்கப்பட்டுள்ளீர்கள். மேலும் இந்த விவாதம் சத்தியத்தின் வழியை விட்டும் நம்மை திசைதிருப்பிவிடும். நமது அறிஞர்களில் எவரும் விவாதம் செய்ததாக நமக்கு தகவல் வரவில்லை.

### நபிமொழிகளுக்கு எதிராக தர்க்கம் செய்வது வழிகேடு!

19. அறிந்துகொள்! இறைநிராகரிப்பு பித்அத் வழிகேடு மார்க்கத்தை நம்புவதில் சந்தேகம் தடுமாற்றம் அகியவவை தர்க்கத்தாலும் தர்க்கவாதிகளாலுமே ஏற்பட்டது. அல்லாஹ்வின் வசனங்களில் இறைநிராகிப்பாளர்களைத் தவிர வேறு யாரும் தர்க்கம் செய்வதில்லை என அல்லாஹ் கூறியிருக்கும் போது ஒரு நல்ல மனிதன் தர்க்கம் செய்யவும் விவாதம் செய்யவும் எப்படித் துணிவான்? எனவே

நபிமொழிகளை பொருந்திக்கொண்டு கட்டுப்பட்டுவிடுங்கள். நபிமொழிகளுக்கெதிராக தர்க்கம் செய்யாமல் மௌனமாக இருங்கள்.

20. அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக! நபிமொழிகளில் ஒப்பீடுகள் செய்வதும் உதாரணங்களைக் கூறுவதும் கூடாது. நபிமொழியில் மனோஇச்சைகளை பின்பற்றுவதும் கூடாது. மாறாக சுய விளக்கம் தராமல் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் செய்திகளை அப்படியே உண்மைப்படுத்த வேண்டும். ஏன்? எப்படி? எனக் கேட்கக்கூடாது. நபிமொழிக்கு எதிராக பேசுவதும் தர்க்கம் செய்வதும் வாயடிப்பதும் பித்அத்தாகும்.

21. தர்க்க வாதங்களை பார்ப்பதையும் தர்க்கவாதிகளுடன் அமர்வதையும் விட்டுவிடுங்கள். ஹதீஸ்களையும் ஹதீஸ் உடையவர்களையும் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். அவர்களிடமே மார்க்கம் பற்றி கேளுங்கள். அவர்களுடனே அமருங்கள். அவர்களிடமிருந்தே மார்க்க அறிவைப் பெறுங்கள்.

22. நீங்கள் சத்தியத்தில் உறுதியாக இருந்து உங்களுக்கு முன்னால் சென்ற அஹ்லுஸ் சுன்னாவினரின் வழியில் செல்ல வேண்டும் என விரும்பினால் தர்க்கம் செய்வதையும் மார்க்க விசயங்களில் தர்க்கம் விவாதம் வாக்குவாதம் ஒப்பீடு செய்தல் ஆகிய காரியங்களில் ஈடுபடக்கூடியவர்களையும் புறக்கணித்துவிடுங்கள். ஏனெனில் அவர்களின் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதை நீங்கள் கேட்பதே உங்கள் உள்ளத்தில் சந்தேகத்தை ஏற்படுத்திவிடும். இதன் பின் அதை நீங்கள் ஏற்று அழிந்துபோய்விடுவீர்கள்.

தர்க்கம் விவாதம் வாக்குவாதம் இவற்றின் மூலமே இறைநிராகரிப்பும் பித்அத்தும் வழிகேடும் மனோஇச்சைகளும் உருவாகின. இவைதான் மார்க்கத்தில் சந்தேகத்தையும் நிராகரிப்பையும் ஏற்படுத்தும் பித்அத்தின் வாசல்களாகும். எனவே உங்கள் விசயத்தில் அல்லாஹ்வை

அஞ்சிக்கொள்ளுங்கள். ஹதீஸ்களையும் ஹதீஸ் உடையவர்களையும் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். முழுமையாக கட்டுப்பட்டுவிடுங்கள். நபி(ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் அப்படியே பின்பற்றுவது தான் மார்க்கமாகும்.

நமக்கு முன் சென்றவர்கள் நம்மை குழப்பத்தில் விட்டுவிடவில்லை. எனவே அவர்கள் வழியில் சென்று நிம்மதியடையுங்கள். ஹதீஸ்களுக்கும் ஹதீஸ்கள் உடையவர்களுக்கும் கட்டுப்படாமல் மீறிவிடாதீர்கள். பலபொருள் கொண்ட வசனங்கள் (முதஷாபிஹாத்) மற்றும் ஹதீஸ்களில் (புதுமையான விளக்கம் தராமல்) நின்றுவிடுங்கள். மார்க்கத்தில் நீங்கள் ஒப்பீட்டின் அடிப்படையில் நீங்களாக சுயமான முடிவுகளை எடுக்க வேண்டாம்.

23. அறிந்துகொள்ளுங்கள்! அதிகமான நூற்களை படிப்பதும் பலத் தகவல்களை எடுத்துரைப்பதும் கல்வியல்ல. சில புத்தகங்களைப் படித்து குறைவான அறிவைப் பெற்றிருந்தாலும் குர்ஆனையும் நபிவழியையும் கடைபிடிப்பவரே அறிஞராவார். குர்ஆன் மற்றும் நபிவழிக்கு மாறுபடுபவர் பல நூற்களைப் படித்து நிறைய விசயங்களை அறிந்திருந்தாலும் அவர் பித்அத்வாதியே!

24. மனோஇச்சையை பின்பற்றக்கூடியவர்களுடன் ஒரு மனிதன் அமர்வதை நீங்கள் கண்டால் அவருக்கு விசயத்தை எடுத்துச் சொல்லி எச்சரிக்கை செய்யுங்கள். அவர் அறிந்த பின்னும் அமருவாரேயானால் அவர் விசயத்தில் எச்சரிக்கையைக இருங்கள். ஏனெனில் அவரும் மனோஇச்சை உடையவர் ஆவார்.

25. அறிந்துகொள்ளுங்கள்! மனோஇச்சைகள் அனைத்தும் இஸ்லாமை விட்டும் வெளியேற்றக்கூடியவையும் வெட்டுக்குத்திற்கு வித்திடக்கூடியதும் ஆகும். இவற்றில் மிக மோசமானவையும் இறைநிராகரிப்பில் உச்சகட்டத்திலும் இருப்பவர்கள் ரா..பிளாக்களும்

மு..தஸிலாக்களும் ஜஹ்மியாக்களும் ஆவர். ஏனெனில் இவர்கள் மக்களை இறைத்தன்மைகளை மறுக்கும் கொள்கைக்கு மாற்ற நினைக்கின்றனர்.

## கொள்கை விசயத்தில் புதுக்கருத்துக்களை ஏற்கக் கூடாது

26. அறிந்துகொள்! சத்தியவாதிகளான அஹ்லுஸ் சுன்னாவினர் எல்லா காலத்திலும் இருப்பார்கள். அவர்களுக்கு அல்லாஹ்வே நேர்வழிகாட்டுபவன். அவர்கள் மூலம் அல்லாஹ் மற்றவர்களுக்கு நேர்வழிகாட்டுவான். அவர்களின் மூலம் நபிவழிகளை அவன் உயிர்ப்பிப்பான். என் சமுதாயத்தில் ஒரு சாரார் மறுமை நாள் வரும்வரை சத்தியத்தில் இருந்துகொண்டே இருப்பார்கள் என அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

27. அறிந்துகொள்ளுங்கள்! புதுமையான கொள்கைகள் தோன்றும் போது மக்கள் அதில் சற்று கூட நுழையாமல் நின்றுவிட வேண்டும். எவ்விசயத்தில் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களிடமிருந்தும் அவர்களின் தோழர்களிடமிருந்தும் எந்த ஒரு செய்தியும் வரவில்லையோ அவ்விசயத்தில் தாங்களாக எந்தக் கூற்றையும் அவர்கள் புதிதாகக் கூறக்கூடாது. இவ்வாறு அவர்கள் இருந்தால் எந்த ஒரு பித்அத்தும் உருவாகாது.

28. பித்அத்கள் (புதுமையானவை) சிறியவையாக இருந்தாலும் அவற்றில் எச்சாரிக்கையாக இருங்கள். ஏனென்றால் சிறிய பித்அத்கள் தான் பெரிதாக மாறிவிடுகின்றன. இவ்வாறே இந்த சமுதாயத்தில் தோன்றிய அனைத்து பித்அத்களும் ஆரம்பத்தில் சத்தியத்தின் சாயலில் சிறிதாகவே இருந்தன. இதனால் பலர் ஏமாந்து அதில் நுழைந்தனர். பிறகு அவர்களால் அதிலிருந்து வெளியேற முடியவில்லை. அந்த பித்அத் வீரியமடைந்து கடைபிடிக்கப்படும் தனிக்கொள்கையாகவே

மாறியது. இதனால் அவர்கள் நேரான வழியை புறக்கணித்து இஸ்லாமை விட்டும் வெளியேறினர். எனவே கவனமாக இருங்கள்!

அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக! குறிப்பாக உங்கள் காலத்தில் உள்ளவர்களில் எவரது பேச்சை நீங்கள் கேட்டாலும் அதுபற்றி நபித்தோழர்களில் எவராவது பேசியுள்ளார்களா? அல்லது முன்சென்ற அறிஞர்களில் யாராவது கூறியுள்ளார்களா? என நீங்கள் கேட்டு அறிந்துகொள்ளும் வரை அவரது கருத்தில் நீங்கள் அவசரப்பட்டு நுழைந்துவிட வேண்டாம். அவ்விசயத்தில் அந்த அறிஞர்களிடமிருந்து ஒரு செய்தி கிடைத்தாலும் அதைப் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். எந்தக் காரணத்தாலும் அதனை மீறிவிடாதீர்கள். அதைப் புறக்கணித்துவிட்டு வேறு எதையும் தேர்வு செய்துவிடாதீர்கள். இல்லையென்றால் நீங்கள் நரகத்தில் விழுந்துவிடுவீர்கள்.

29. அறிந்துகொள்ளுங்கள்! சரியானப் பாதையை விட்டும் விலகியவர் இரண்டு வகைப்படுவர். நன்மையை மட்டுமே நாடிய நிலையில் தன்னையறியாமல் வழிதவறிய மனிதன் இவர்களில் ஒருவன் ஆவான். இவன் அழியக்கூடியவன் என்பதால் இவனைப் பின்பற்றக் கூடாது. சத்தியத்துடன் முரண்பட்டு அவனுக்கு முன் சென்ற இறையச்சமுள்ளவர்களுக்கு முரணான வழியில் செல்பவன் மற்றொரு மனிதன் ஆவான். இவனே இந்த சமுதாயத்தில் தானும் வழிகெட்டு மற்றவர்களையும் வழிகெடுக்கும் முரண்டுபிடிக்கும் ஷைத்தான் ஆவான். இவனைப் பற்றி அறிந்தவர்கள் இவன் விசயத்தில் மக்களுக்கு எச்சரிக்கை செய்வதும் இவனது வழிகேட்டை மக்களுக்கு தெளிவுபடுத்துவதும் அவர்களின் கடமையாகும். ஏனெனில் இவனது பித்அத்தில் எவரும் விழுந்து அழிந்துவிடக்கூடாது.

30. அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக! உயர்ந்தோனாகிய அல்லாஹ் குறித்து சுயமாகப் பேசுவது

புதுமையாகும். இதுவே பித்அத்தும் வழிகேடும் ஆகும். அல்லாஹ் தன்னைக் குறித்து திருக்குர்ஆனில் கூறியதையும் அவனுடைய தூதர்(ஸல்) அவர்கள் அல்லாஹ் குறித்து தன் தோழர்களுக்கு தெளிவுபடுத்தியதையும் தவிர வேறு எதையும் அவன் விசயத்தில் பேசக்கூடாது.

31. அறிந்துகொள்ளுங்கள்! ஒருவர் அல்லாஹ்வின் மார்க்கத்தில் தன் சுய சிந்தனையைக்கொண்டும் தன் யூகத்தைக் கொண்டும் கருத்துத் தெரிவித்தால் நபிவழியிலும் நபித்தோழர்களிடமும் ஆதாரத்தைக் காட்டாமல் ஆதாரங்களுக்கு மாற்று விளக்கம் சொன்னால் அவர் தனக்கு அறிவில்லாத விசயத்தை அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டியவர் ஆவார். தான் அறியாத விசயத்தை அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுபவர் தேவையின்றி பிரச்சனைகளை உருவாக்குபவர் ஆவார்.

32. ஜஹ்மியாக்கள் (அல்லாஹ்வின் தன்மைகளை மறுத்தவர்கள்) அல்லாஹ்வுடைய விசயத்தில் தேவையின்றி சிந்தித்தனர். ஏன்? எப்படி? என்ற கேள்விகளை மார்க்கத்தில் நுழைத்தனர். நபிமொழிகளை புறக்கணித்து தங்களின் அறிவுக்கு ஏற்றவாறு மார்க்கத்தை அனுகினர். இதனால் வெளிப்படையான தெளிவான இறைமறுப்பை கொண்டு வந்துவிட்டனர். அவர்கள் காஃபிர்களாகிவிட்டு அனைத்து மக்களையும் காஃபிர்கள் எனக் கூறினர்.

## நபித்தோழர்களை விமர்சனம் செய்பவன் பித்அத்வாதி

33. நபிமார்களுக்குப் பிறகு இந்த சமுதாயத்தில் சிறந்தவர் அபூபக்ர்(ரலி) ஆவார்கள். பிறகு உமர்(ரலி) சிறந்தவர் ஆவார். பிறகு உஸ்மான்(ரலி) சிறந்தவர் ஆவார். இதன் பிறகு நபி(ஸல்) அவர்களுடன் தோழமைகொண்ட நபித்தோழர்கள் சிறந்தவர்கள் ஆவர். இதன் பின் நபித்தோழர்களுடன் தோழமை கொண்டவர்கள் சிறந்தவர்கள் ஆவர்.

நபித்தோழர்களுக்காக நாம் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம். அவர்களின் சிறப்பு குறித்து மட்டும் பேசுவோம். அவர்களிடம் ஏற்பட்ட தவறுகளைப் பற்றி பேசமாட்டோம். அவர்களில் எவரையும் நல்லவிதமாகவேத் தவிர பேசமாட்டோம். ஒருவன் நபித்தோழர்களைப் பற்றி ஒரு வார்த்தை விமர்சனம் செய்தாலும் அவன் மனோஇச்சையைப் பின்பற்றுபவன் என சுஃப்யான் பின் உஜனா கூறியுள்ளார்.

34. ஒருவன் நபித்தோழர்கள் மீது குறைகூறுவதைக் கண்டால் அவன் தீய கொள்கையுடையவனும் மனோஇச்சையவாதியும் ஆவான். ஏனென்றால் என்தோழர்கள் விமர்சிக்கப்பட்டால் நீங்கள் அதிலிருந்து விலகிக்கொள்ளுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள் தனது மரணத்திற்குப் பிறகு தன் தோழர்களிடம் ஏற்படும் பிழைகளை அறிந்திருந்தும் அவர்கள் விசயத்தில் நல்லதைத் தவிர வேறு எதையும் நபி(ஸல்) அவர்கள் கூறவில்லை.

மேலும் நபி(ஸல்) அவர்கள் என் தோழர்களை விட்டுவிடுங்கள். அவர்கள் விசயத்தில் நல்லதைத் தவிர வேறு எதையும் கூறாதீர்கள் எனக் கூறினார்கள். எனவே நபித்தோழர்களுக்கிடையே நடந்த போர் குறித்தும் அவர்களிடம் ஏற்பட்ட பிழைகள் குறித்தும் மேலும் எதைப் பற்றிய ஞானம் உனக்கு இல்லையோ அது குறித்தும் நீங்கள் பேச வேண்டாம். இவற்றை எடுத்துக்கூறும் எந்த நபரிடமும் இதை நீங்கள் கேட்க வேண்டாம். ஏனெனில் இதை நீங்கள் கேட்டால் உங்கள் உள்ளம் கெட்டுவிடும்.

35. அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் தோழர்களில் ஒருவரைப் பற்றி யாராவது விமர்சனம் செய்தால் அவன் முஹம்மது(ஸல்) அவர்களேயே விமர்சிக்க நாடுகிறான். கப்றில் உள்ள நபி(ஸல்) அவர்களை அவன் நோவினை செய்துவிட்டான் என்பதை

அறிந்துகொள்ளுங்கள். ஒருவனிடம் இதுபோன்ற பித்அத் ஏதும் வெளிப்பட்டுவிட்டால் அவன் விசயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் அவன் உங்களிடம் வெளிப்படுத்தியதை விட மறைத்து வைத்திருப்பது அதிகமாகும்.

பாவங்களையும் குற்றங்களையும் செய்து அநீதம் இழைத்தவனாகவும் பாவியாகவும் உள்ள ஒருவன் அஹ்லுஸ் சுன்னாவினரின் கொள்கை உள்ளவனாக இருந்தால் அவனுடன் நீங்கள் பழகலாம். அவனுடன் நீங்கள் அமரலாம். ஏனெனில் அவனுடைய குற்றங்களால் உங்களுக்குத் தீங்கு ஏற்படாது. வணக்கசாலியாகவும் நன்மையில் பாடுபடக்கூடியவனாகவும் உலக ஆசை அற்றவனாகவும் உள்ள ஒருவன் மனோஇச்சையை பின்பற்றக்கூடியவனாக இருந்தால் அவனுடன் நீங்கள் அமர வேண்டாம். அவனுடைய பேச்சை கேட்க வேண்டாம். அவனுடன் சேர்ந்து எந்த பாதையிலும் நீங்கள் செல்ல வேண்டாம். ஏனெனில் அவனது வழியை நீங்களும் விரும்பி அவனுடன் நீங்களும் அழிந்துவிடுவீர்கள் என நான் அஞ்சுகிறேன்.

36. அலீ(ரலி) முஆவியா(ரலி) ஆயிஷா(ரலி) தல்ஹா(ரலி) ஸுபைர்(ரலி) இவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. இவர்களுக்கிடையே நடைபெற்ற போர் குறித்து பேசக் கூடாது. இவர்களுடன் சேர்ந்துகொண்டவர்கள் குறித்தும் தர்க்கம் செய்யக்கூடாது. இவர்களின் அனைவரின் காரியமும் அல்லாஹ்விடமே உள்ளது. ஏனெனில் என்தோழர்களைப் பற்றி பேசாதீர்கள் எனவும் அல்லாஹ் பத்ர் போரில் கலந்துகொண்டவர்களைப் பார்த்து நீங்கள் விரும்பியதை செய்துகொள்ளுங்கள். நான் உங்களை மன்னித்துவிட்டேன் எனக் கூறினான் எனவும் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

37. அபூஹுரைரா(ரலி) அனஸ் பின் மாலிக்(ரலி) உஸைத் பின் ஹுளைர் (ரலி) ஆகியோரை விரும்பும் மனிதரை நீங்கள் கண்டால் அல்லாஹ் நாடினால் அவர் சுன்னா உடையவர் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

38. அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் சொர்க்கவாசிகள் என யாருக்கு நற்சான்று அளித்தார்களோ அந்த நபித்தோழர்கள் சொர்க்கவாசிகள் என நீங்களும் கூறுவதே நபிவழியாகும். இதில் எந்த சந்தேகமும் கொள்ளக்கூடாது. நபி(ஸல்) அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் தவிர வேறு யாருக்கும் ஸலவாத்து கூறக் கூடாது. உஸ்மான்(ரலி) அவர்கள் அநியாயமாக கொலை செய்யப்பட்டார்கள். அவர்களைக் கொன்றவர்கள் அநியாயக்காரர்கள் என நீங்கள் நம்ப வேண்டும். இந்நூலில் கூறப்பட்ட விசயங்களில் ஒன்றைக்கூட மறுக்காமலும் சந்தேகப்படாமலும் இவற்றை அங்கீகரித்து நம்பிக்கைக்கொண்டு இதை வழிகாட்டியாக எடுத்துக்கொண்டவரே முழுமையான சுன்னத் ஜமாஅத் ஆவார். அவரிடமே ஜமாஅத் முழுமையாக உள்ளது.

## வழிகேடர்கள் ஜமாஅத் தொழுகையைப் புறக்கணிப்பார்கள்

39. தகுந்த காரணம் இன்றி பள்ளிவாசலில் ஜமாத்துடன் தொழுவதையும் ஜும்ஆத் தொழுகையையும் விடக்கூடியவன் பித்அத்வாதியாவான். பள்ளிவாசலுக்குப் புறப்பட இயலாத அளவுக்கு நோய் ஏற்படுவது அல்லது அக்கிரமக்கார அரசன் மீதுள்ள பயம் ஆகியவையே தகுந்த காரணமாகும். இவையல்லாத காரணங்களுக்கு ஜமாத் தொழுகையைப் புறக்கணிக்க அனுமதியில்லை. ஒரு இமாமுக்குப் பின்னால் நின்று தொழுபவன் அந்த இமாமைப் பின்பற்றவில்லையானால் அவனுக்குத் தொழுகை இல்லை.

40. ஒரு மனிதர் கடமையானத் தொழுகைகளை ஜமாஅத்துடன் தொடர்ந்து நிறைவேற்றுவதை நீங்கள் கண்டால் அல்லாஹ் நாடினால் அவர் சுன்னா உடையவர் (நபிவழியில் செல்பவர்) என்பதை அறிந்துகொள்ளுங்கள். கடமையானத் தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுவதில் அசட்டையாக இருக்கும் மனிதனை நீங்கள் கண்டால் அவன் மனோஇச்சை உள்ளவன் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

## நூலாசிரியரின் வேண்டுகோள்

41. இந்நூலில் நான் விவரித்துக் கூறிய விசயங்கள் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தும் அவனுடைய தூதரிடமிருந்தும் தாபியீன்களிடமிருந்தும் மூன்றாவது தலைமுறை மற்றும் நான்காது தலைமுறையினரிடமிருந்தும் பெறப்பட்டவை ஆகும். எனவே அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். இந்நூலில் கூறப்பட்ட கருத்துக்களை பொருந்திக்கொண்டு இவற்றை உண்மைப்படுத்தி கட்டுப்பட்டுவிடுங்கள்.

முஸ்லிம்களில் எவருக்கும் இந்நூலலைக் கொடுக்காமல் மறைத்துவிடாதீர்கள். ஏனெனில் குழப்பத்தில் உள்ளவரை இந்நூலின் மூலம் அவனது குழப்பத்திலிருந்து அல்லாஹ் தெளிவடையச் செய்யலாம். அல்லது ஒரு பித்அத்வாதியை அவருடைய பித்அத்திலிருந்து அல்லாஹ் இதன் மூலம் விடுவிக்கலாம். அல்லது வழிதவறிய ஒருவரை அவருடைய வழிகேட்டிலிருந்து இதன் மூலம் அல்லாஹ் நேர்வழிபடுத்தலாம். இதனால் அவர் வெற்றிபெறுவார். அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! முதன்மையான பழமையான கொள்கையை மட்டுமே பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். அதைப் பற்றியே இந்நூலில் நான் விவரித்துள்ளேன்.

42. இந்நூலில் கூறப்பட்ட விசயங்களில் ஏதேனும் ஒன்றை மறுப்பவன் அல்லது ஏதேனும் ஒன்றில் சந்தேகம் கொண்டு

ஏற்றுக்கொள்ளத் தயங்குபவன் மனோஇச்சை உடையவன் ஆவான். குர்ஆனில் ஏதாவது ஒரு விசயத்தை ஒருவன் மறுத்தால் சந்தேகம் கொண்டால் அல்லது அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களிடமிருந்து வந்த ஹதீஸ்களில் எதையாவது மறுத்தால் அவன் சத்தியத்தை பொய்யென மறுத்தவனாகவே அல்லாஹ்வை சந்திப்பான். எனவே அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். எச்சரிக்கையாக இருங்கள். உங்கள் ஈமானை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

43. இந்நூலைப் படித்து அதனடிப்படையில் செயல்பட்டு இதனை ஆதாரமாகக் கொண்டு இதனை நோக்கி மக்களை அழைத்து இதை பரப்பிய அடியாருக்கும் அவரது பெற்றோர்களுக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக! இதுவே அல்லாஹ்வின் மார்க்கமும் அவனது தூதரின் மார்க்கமும் ஆகும். இந்நூலில் கூறப்பட்ட கொள்கைக்கு மாற்றமாக எதையேனும் யார் ஆகுமாக்கிக்கொண்டாலும் அவன் அல்லாஹ்வின் மார்க்கத்தில் கொஞ்சத்தைக் கூட கடைபிடிக்கவில்லை. அவன் அனைத்தையும் மறுத்துவிட்டவனைப் போன்றவன்.

உதாரணமாக அல்லாஹ் கூறிய அனைத்தையும் நம்பிக்கைக்கொண்ட ஒருவன் அல்லாஹ் கூறிய ஒரு எழுத்தில் சந்தேகம் கொண்டால் அவன் இறைமறுப்பாளனாக மாறி அல்லாஹ் கூறிய அனைத்தையும் அவன் இழந்துவிடுவான். மேலும் லாயிலாஹ இல்லல்லாஹ் என உறுதிமொழிவது அதைக் கூறியவரிடம் தெளிவான உறுதியும் சரியான எண்ணமும் இருந்தாலே அவரிடமிருந்து அது ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறே நபிமொழியில் சிலதை புறக்கணித்து சிலதை ஏற்றால் இதையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

யார் முரண்பட்டு நபிமொழிகளில் சிலதை மறுக்கின்றாரோ அவர் நபிமொழிகள் முழுவதையும் மறுத்தவர் ஆவார். எனவே

நபிமொழிகளை ஏற்றுக்கொண்டுவிடுங்கள். நபிமொழிக்கு எதிராக தர்க்கம் செய்து பிடிவாதம் கொள்வதை விட்டும் உங்களை எச்சரிக்கின்றேன். ஏனெனில் நிச்சயமாக இது அல்லாஹ்வின் மார்க்கத்தை கடைபிடிக்கும் வழி அல்ல. குறிப்பாக உன்னுடைய காலம் மோசமான காலமாகும். அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்.

44. குழப்பம் ஏற்பட்டுவிட்டால் உங்கள் வீட்டிற்குள்ளேயே இருந்துகொள்ளுங்கள். குழப்பத்தை கண்டு வெருண்டு ஓடுங்கள். இயக்கவெறி உங்களுக்கு ஏற்பட்டுவிட வேண்டாம். இந்த உலகத்தில் முஸ்லிம்களுக்கு இடையே நடந்த சண்டைகள் அனைத்தும் குழப்பங்களாகும். எனவே இணையில்லாத தனித்தவனான அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்.

குழப்பத்தில் ஈடுபட்டு சண்டையிட புறப்படாதீர்கள். இவ்விசயத்தில் எதையும் ஆதரித்து ஒரு பக்கமாக சாய்ந்துவிட வேண்டாம். பிரிவினை உருவாக்க வேண்டாம். ஒரு கூட்டத்தின் செயலை ஆதரிப்பவர் அது நன்மையானாலும் தீமையானாலும் அதை செய்துவிட்டவரைப் போன்றவர் ஆவார். எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ் அவனது திருப்பொறுத்தத்தைப் பெற அருள்புரிவானாக. அவனுக்கு மாறு செய்யும் காரியங்களை விட்டும் அல்லாஹ் என்னையும் உங்களையும் விலக்கிவிடுவானாக.